# <u>தாரமங்கலம் நகராட்சி</u>

## <u>நகர்மன்ற சாதாரண கூட்டம்</u>

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2022ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து வார்டு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை :–** **திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகராட்சி மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

**பொருள் எண்.262 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் செப்டம்பர்–2022 மற்றும் அக்டோபர்–2022 மாதத்தில் நிகழ்ப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| செப்டம்பர் 22 | 4 | 1 | 5 | 12 | 5 | 17 | 0 | 0 | 0 |
| அக்டோபர் 22 | 2 | 0 | 2 | 7 | 2 | 9 | 0 | 0 | 0 |

**பொருள் எண்.263 (2)**

தாரமங்கலம் நகராட்சிக்கு 2021–2022 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ஓமலூர் ரோடு அரியபுத்திரன் பூங்கா பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் விளையாடுவதற்கு, பயன்படுத்தும் விதமாக உள்ளதால் இப்பூங்காவினை பராமரிப்பதற்கு சுய உதவிக்குழு மூலமாக 1 ஆண் மற்றும் 1 பெண் பணியாளர்களை தற்காலிகமாக 31.3.2023 வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதப்படி தேர்வு செய்து பூங்காவினை பராமரிக்கும் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணியாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் வழங்கிடவும், பூங்காவினை தூய்மையாக வைத்து பாதுகாப்பாக பராமரித்து வரவும் செலவினம் ஏற்படும் என்பதால் பொதுமக்கள் இப்பூங்காவினை பயன்படுத்துவதற்கு கடந்த மாதம் நடைபெற்ற சாதாரணகூட்டத்தில் நபர் ஒருவருக்கு ரூ.10/– என நிர்வாகத்தால் வசூல் செய்து ஈடு செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டதை மன்றத்தால் ஒத்தி வைக்கப்பட்டு தற்போது பூங்காவிற்குள் செல்வதற்கு நபர் ஒருவருக்கு ரூ.5/– என நிர்ணயம் செய்து மேற்படி வசூல் தொகையில் ஊதியம் மற்றும் பூங்கா பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தியது போக மீதம் ஏற்படும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் பயன்படுத்திக்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 510/2021/அ1)

பொருள் எண்.264 (3)

தாரமங்கலம் பேரூராட்சியானது அரசாணை நிலை எண்.117 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (தேர்தல்) நாள்.07.12.2021–ன்படி இருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி தொடர்பான எந்த ஒரு வரைபடமோ சாலை பதிவேடுகளோ, இதற்கு முன் அமைக்கப்பட்ட சாலை விவரங்களோ அல்லது தற்சமயம் திட்டப்பணிகளின் மூலம் மேற்கொள்ள வேண்டிய விபரங்களோ ஏதும் இல்லாத நிலை உள்ளது. மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் தயார் செய்ய அலுவலகத்தில் தொழில் நுட்ப அலுவலர்கள் யாரும் இல்லாத நிலையும் உள்ளது.

எனவே மேற்படி பணியை உடன் செய்து முடித்து நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கும் பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று Smart Builders என்ற நிறுவனத்தினர் மூலம் உடன் விபர அறிக்கைகள் தயார் செய்தமைக்கான செலவினம் ரூ.3,00,000/– லட்சத்தினை பொது நிதியிலிருந்து விடுவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1189/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .265 (4)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி நகர் மன்ற தீர்மான எண்.122 (29) நாள்.28.6.2022–ன் படி இந்நகராட்சியின் 1 முதல் 27 வார்டுகளிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை சேகரம் செய்ய வேண்டி தள்ளவண்டியில் செல்ல முடியாத மேடான பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை சேகரம் செய்வதற்கு பயன்படுத்தும் 4 எண்ணிக்கை கொண்ட பேட்டரி மூலம் இயங்கும் 3 சக்கர வாகனங்களுக்கு பழுதடைந்துள்ள லைட், சுவிட்ச் செட், பிரேக், வீல், டிஸ்க், கன்ட்ரோலார் , புதிய டியூப் மற்றும் இதர பழுதான பாகங்களை மாற்றி பழுது நீக்கம் மற்றும் 18 வண்டிகள் பழுது நீக்கம் செய்ய நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டு, மேற்படி வாகனங்களை பழுது நீக்கி பயன்பாட்டிற்கு கொண்டு வந்தமைக்கு ஆகிய செலவினம் ரூ.4,50,000/– என்பதற்கு பதிலாக ரூ.1,50,000/– என்று குறைவான மதிப்பீடாக குறிப்பிடப்பட்டது, மேற்படி பணியினை மேற்கொண்ட செலவினம் ரூ.4,50,000/– தொகையினை PERFECT AUTO ENGINEERING WORKS என்ற நிறுவனத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 223/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .266 (5)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட உள்ள திறந்தவெளி கிணறுகளில் முதல் கட்டமாக கீழ்க்கண்ட வார்டுகளில் உள்ள திறந்தவெளி கிணறுகளில் , குழந்தைகள் மற்றும் பொது மக்கள் , விலங்கினங்கள் தவறி விழாமல் இருப்பதற்கு, பாதுகாப்பு நலன் கருதி அவற்றிற்கு முறையாக உரிய இரும்பு கம்பி வேலி அமைத்து கிணற்றின் மேல் பகுதியினை ஆங்கிள் கொண்டு , வெல்டிங் செய்து மூடி வைக்கவும் அதற்கு ஆகும் செலவினம் ரூ.9,00,000/– தாரமங்கலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் பெறப்பட்ட 2020–2021 –ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | பகுதியின் பெயர் |
|---|---|---|
| 1. | 1 | கசுவரெட்டிப்பட்டி |
| 2. | 2 | ஆதிதிராவிடர் தெரு |
| 3. | 4 | பெரியாம்பட்டி மாரியம்மன் கோவில் |
| 4. | 5 | வெட்னிகரடு |
| 5. | 6 | காரைக்காட்டு மாரியம்மன் கோவில் |
| 6. | 10 | உப்புகிணறு |
| 7. | 13 | மேற்கு ரதவீதி |
| 8. | 14 | ஜலகண்டாபுரம் ரோடு (வேலாயுதசாமி கோவில்முன்புறம்) |
| 9. | 15 | முனியகவுண்டன்வளவு |
| 10. | 16 | மோட்டுப்பட்டி |
| 11. | 18 | புதுத்தெரு லைன் முத்து முனியப்பன் கோவில் தெரு |
| 12. | 20 | புலவன் சந்து |
| 13. | 21 | பாவடி ஆறுமுக முதலி தெரு |
| 14. | 22 | ஆதிதிராவிடர் தெரு |
| 15. | 27 | கட்டைய முத்து முதலி தெரு |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1188/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை 15வதுநிதிக்குழு நிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .267 (6)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் அடிப்படை வசதிகள், ஆழ்துளை கிணறு அமைத்து பைப் லைன் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் சிமெண்ட் சாலை சீரமைப்பு கல்வெர்ட் சீரமைப்பு பணிகள் பொது மக்களின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு, நகராட்சியின் பொதுநிதியில் 2022–2023 ஆம் ஆண்டு முதல் கட்டமாக 18 பணிகளும், இரண்டாம் கட்டமாக 13 பணிகளும் ஆக மொத்தம் 31 பணிகள் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி செய்வதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.411/2022/அ1)

**பொருள் எண் .268 (7)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 7வது வார்டு பத்ரகாளியம்மன் கோவில் அருகில் கழிவுநீர் செல்வதற்கு வழியில்லாமல் கழிவுநீர் தேங்கி அதே இடத்தில் இருப்பதால், தற்போது ஏற்படும் காய்ச்சல் மற்றும் பொது சுகாதாரத்தினை கருத்தில் கொண்டும் பொது மக்களின் நலன் கருதி கழிவுநீர் வாய்க்காலில் உள்ள கழிவுநீரை ஒரு தொட்டி அமைத்து கழிவுநீரை சேகரம் செய்து 7 ஹெட்ச்.பி. மின்மோட்டார், பைப் மற்றும் அதற்கு தேவையான இதர உபகரணங்கள் புதியதாக வாங்கி பொருத்தி அக்கழிவுநீரை நங்கவள்ளி மெயின் ரோட்டில் உள்ள கழிவுநீர் வாய்க்காலில் செல்வதற்கு ஏதுவாக பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.4,00,000/–யை தாரமங்கலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் பெறப்பட்ட 2020–2021 – ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1104/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை 15வதுநிதிக்குழு நிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.269 (8)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட ஓமலூர் மெயின் ரோட்டில் 15வது நிதிக்குழு திட்டத்தில் பூங்கா பராமரிப்பு பணி ரூ.47.00/– லட்சத்தில் செய்யப்பட்டு பணி முடிவுறும் நிலையில் உள்ளது. மேலும் பூங்காவின் ஒருபுறம் மட்டும் பெயிண்டிங் செய்தல் மற்றும் பூங்காவின் முன்புறம் உள்ள கழிவுநீர் வாய்க்காலினை மேல்புறம் மூடுகள் கொண்டு மூடி வைப்பதற்கு பொது மக்கள் பயன்பாட்டிற்கு யூரினல் கழிப்பிடம் அமைப்பதற்கு மற்றும் சில்லரை செலவினம் செய்தவற்கு ஆகும் செலவினம் ரூ.5,00,000/– தாரமங்கலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் பெறப்பட்ட 2020–2021 – ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.510/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை 15வதுநிதிக்குழு நிதியில் மேற்கொள்ளலாம்.

மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் . 270 (9)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளுக்கும் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 2022–2023 ஆம் ஆண்டின் கீழ் பின்வரும் பொருள்களுக்கு ஏற்கனவே மன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அக்டோபர் 2022 மாதம் வரை செலவிடப்பட்டதால், தற்போது பிளீச்சிங் பவுடர் (குடிநீர்), பிளீச்சிங் பவுடர் (பொது சுகாதாரம்), சுண்ணாம்புத்துாள் கருப்பு பினாயில், போக்கிங் கேஸ் (Fogging Gas) ஆசிட், லைசால் மற்றும் தளவாட சாமான்கள் கொள்முதல் செய்வதற்கு செலவினம் ரூ.9,00,000/– இலட்சத்திற்கு பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் . 271 (10)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ளும் பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் திடக்கழிவு பணியாளர்களுக்கு தற்போது பருவ மழை காலம் என்பதால் பொது சுகாதார பணி தொய்வு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு அப்பணியாளர்களின் உடல் நலன் கருதியும், புதியதாக ரெயின் கோட் (பாதுகாப்பு கவசம்) மற்றும் கை உறை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வாங்கியமைக்கு ஆகிய செலவினம் ரூ.1,50,000/– நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.11/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் . 272 (11)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் தற்போது பருவமழை காலம் என்பதால் இப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் கொசு மருந்து தெளிப்பதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று புகைபோக்கி இயந்திரம் 1 வாங்கியமைக்கான செலவினம் ரூ.70,000/– விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .273 (12)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் உள்ள வார்டு பகுதிகளில் புல் , பூண்டுகளை அகற்றுவதற்கு, புதியதாக 3 புல் வெட்டும் இயந்திரங்கள் வாங்கியதற்கான செலவினம் ரூ.1,25,000/– நகராட்சியின் பொது நிதியில் ஸ்ரீ ஆறுபடை ஏஜென்சீஸ் நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.14/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .274 (13)

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பைகளை அரைத்து உரமாக்கும் Bio-sheding Machine பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால், பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்தமைக்கான செலவினம் ரூ.86,962/– னை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு திரு.ராஜன் பிளாஸ்டிக்ஸ், ராசிபுரம் என்ற நிறுவனத்திற்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.4/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண்.275 (14)

தாரமங்கலம் நகராட்சியின் 27 வார்டுகளுக்கும் 2022–23 ஆம் ஆண்டிற்கு பதிவு பெற்ற பொறியாளர் (Registered Engineer) உரிமம் வழங்க வேண்டி இணையதளத்தில் வரப்பெற்றுள்ள கீழ்க்கண்ட வரைபடவாளர்களின் விண்ணப்பங்கள் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

1) திரு.மனோகரன் த/பெ அண்ணாமலை 2 வது வார்டு, பெரிய மாரியம்மன் கோவில்
2) திரு.தேவராஜன் த/பெ முத்துராமன் 6 வது வார்டு, கிழக்கு காரைகாட்டு வெள்ளாளர் தெரு
3) திரு.பெரியண்ணன் த/பெ பழனிசாமி பாப்பம்பாடி
4) திரு.அருண்பாண்டி எலமகவுண்டனூர்
5) திரு.தமிழ்செல்வன் த/பெ கணேசன் சங்ககிரி மெயின் ரோடு
6) திரு.ஜெயகோபி த/பெ கோவிந்தன் வெள்ளகல்பட்டி

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.962/2022/அ2)

பொருள் எண்.276 (15)

தாரமங்கலம் நகராட்சிக்கு (Amrut.2.0) அம்ரூட் 2.0, 2022–2023 ஆம் ஆண்டில் 13வது வார்டு பகுதியில் குட்டை பராமரிப்பு பணி ரூ.18.00/– லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு முன்மொழிவு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.786/2022/அ1)

பொருள் எண்.277 (16)

தாரமங்கலம் நகராட்சிக்கு (Amrut.2.0) அம்ரூட் 2.0, 2022–2023 ஆம் ஆண்டில் 4வது வார்டு காவலர் குடியிருப்பு பகுதியில் பூங்கா அமைக்கும் பணி ரூ.21.25/– லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு முன்மொழிவு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 787/2022/அ1)

பொருள் எண்.278 (17)

தாரமங்கலம் நகராட்சி 2022–2023ஆம் ஆண்டு பொதுநிதியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு, இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.962/2022/அ1 நாள்.27.10.2022ஆம் தேதி கோரியதில், அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு நகராட்சியின் பொதுநிதியில் பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.ல | ஒப்பந்ததாரர் பெயர் | அதிகம் | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1வது வார்டு நரிக்குறவர் காலனி பகுதியில் புதியதாக கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் மற்றும் ஆழ்துளைக்கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொடுத்தல். | 4.75 | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை அதிகம் | கௌதம் கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை குறைவு |
| 2. | 3வது வார்டு பாரக்கல்லூர் பகுதியில் புதியதாகக் கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் மற்றும் | 4.75 | எஸ்.மாரியப்பன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை அதிகம் | எ.சண்முகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆழ்துளைக்கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொடுத்தல். | | | | | |
| 3. | 13வது வார்டு நல்லகிணறு தெரு பகுதியில் புதியதாகக் கட்டப்படும் சமுதாய கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க் அமைத்தல். | 1.35 | கௌதம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டை அதிகம் | கலை கன்ஸ்ட்ரக் சன்ஸ் | மதிப்பீட்டை குறைவு |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.962/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.279 (18)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள தெருக்களில் சுற்றித்திரியும் தெருநாய்களை கண்டறிந்து, அவற்றிற்கு ஒரு தெரு நாய்க்கு ரூ.1450/– வீதம் கருத்தடை ஊசிகள் போடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,45,000/– நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1218/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.280 (19)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் சேகரமாகும் பிளாஸ்டிக் கழிவுகளை அழுத்தி (Bailing) பெய்லிங் செய்வதற்கு ஏற்கனவே உள்ள இயந்திரம் பழுதடைந்து உள்ளதால், அதை சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வர ஆகும் செலவினம் ரூ.80,000/– நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.281 (20)

தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவர் அவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு அரசால் வழங்கப்பட்ட (Scorpio) நான்கு சக்கர வாகன எண்.TN.30 CW.5460, நகராட்சியின் ஆணையாளர் (Bolero) வாகன எண். TN.30 CW.5430 ஆகிய இரண்டு வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்களை இயக்குவதற்கு நிரந்தர ஓட்டுநர் பணியிடம் தற்போது வரை தோற்று விக்கப்படவில்லை. மேற்படி வாகனங்களுக்கு நிரந்த பணியிடம் தோற்றுவிக்கும் வரை நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் வாகனத்திதை இயக்குவதற்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விலைவிகிதப்படி திரு.து.கார்த்தி, திரு.டி.தமிழ்மணி ஆகிய இரண்டு நபர்கள் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி.தமிழ்மணி, த/பெ.தேவராஜன், தாரமங்கலம் (License No.TN27Y20070001614 ) என்பவரை தற்காலிகமாக பணியமர்த்திக்கொள்ள விண்ணப்பம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.40/2022/அ1)

பொருள் எண்.282 (21)

தாரமங்கலம் நகராட்சி 2022–2023 ஆம் ஆண்டு நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய கடை எண்.14யை இவ்வலுவலக ந.க.எண்.15/2022/அ1 நாள்.18.07.2022–ன் படி பொது ஏல அறிவிப்பு செய்து 28.7.2022 ஆம் தேதி நடைபெற்ற மூன்றாவது ஏலத்தில் திரு.எம்.பழனிசாமி என்ற ஏலதாரர் மாத வாடகையாக ரூ.35000/–க்கு அதிக பட்ச ஏல தொகையாக ஏலம் எடுத்துள்ளார். மேற்கண்ட கடையை ஏலம் எடுத்த ஏலதாரருக்கு ஒப்படைக்கும் பட்சத்தில் கடையினுள் மின் இணைப்பு , பைப் லைன்கள், மிகவும் பழுதடைந்து சேதமுற்றும் மேலும் உட்புறம் சுவர்கள் விரிசலடைந்து அடிதளம் பழுதடைந்து இருப்பதால், அதனை புதுப்பித்து தர வேண்டி இருந்ததால், மேற்படி பேருந்து நிலைய கடை எண்.14–க்கு 29.07.2022 முதல் 31.08.2022 ஆம் தேதி வரை மாத வாடகை கேட்பு விலக்கு அளிக்கவும் மேலும் 01.09.2022 ஆம் தேதி முதல் வாடகை தொகை வசூலித்துக்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.15/2022/அ1)

**பொருள் எண்.283 (22)**

தாரமங்கலம் நகராட்சி 2022–2023 ஆம் ஆண்டிற்கு (KNMT) கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திலிருந்து (Consent to Establish) தண்ணீர் மற்றும் காற்று மாசுபடாத வண்ணம் பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் பணி மேற்கொள்ள சேலம் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திலிருந்து சான்று பெறுவதற்கு (District Environmental Engineer, TNPCB Salem) ரூ.43600/–க்கான பாரத மாநில வங்கி தாரமங்கலம் மூலம் நாள்.18.11.2022–ன் படி வங்கி வரைவோலை அனுப்பி வைத்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 86/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.284 (23)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.6–ல் சர்வே எண்.182/2–ல் வாரச்சந்தை பகுதியில் 5000/– சதுர அடி பரப்பளவில் 2022–2023ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பு புதிய அலுவலக கட்டிடம் ரூ.350/– லட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட கட்டமைப்பு, உள் வடிவமைப்பு குறித்து வரைபடம் முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி , தர்மபுரி என்ற முகவரிக்கு பாரத மாநில வங்கி தாரமங்கலம் வங்கி வரைவோலை எண்.780677 நாள்.18.11.2022 ஆம் தேதியில் ரூ.95580/–க்கான வங்கி வரைவோலை அனுப்பி வைத்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.07/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.285 (24)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2021–2022ஆம் ஆண்டு திட்டத்தில் பணியினை மேற்கொள்ள திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்கள் கீழ்க்கண்ட பணிகளுக்கு தல ஆய்வு செய்து சாத்தியக்கூறு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, கீழ்க்காணும் பணிகளுக்கான சாத்தியக்கூறு விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்ட விவரம், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒதுக்கீடு ரூ.ல | உத்தேச மதிப்பீடு ரூ.ல | சாத்தியக்கூறு |
|---|---|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி, 17வது வார்டு புது தெரு லைன் –9ல் எஸ்.பி.கோவிந்தராஜ் வீடு முதல் கோபால் வீடு வரை சிறுபாலம் வரை 250 மீட்டர் நீளம் சாக்கடை வடிகால் வசதி அமைக்கும் பணி | 9.50 | 9.50 | இடம் பார்வையிடப் பட்டது. மழைநீர் வெளியேற சரியான வழித்தடம் இல்லை. |
| 2. | தாரமங்கலம் நகராட்சி பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள நவீன கழிப்பிடம் அருகில் 42 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் அகலம் சாக்கடை வசதி அமைக்கும் பணி | 3.00 | 3.00 | இடம் பார்வையிடப் பட்டது. பணி செய்ய இடையூறுகள் ஏதுமில்லை. |
| 3. | தாரமங்கலம் நகராட்சி 14 வது வார்டு ஜலகண்டாபுரம் மெயின் ரோடு யமஹா ஷோரூம் முதல் சரஸ்வதிமணி வீடு வரை 150 மீட்டர் நீளம் 4 மீட்டர் அகலம் புதிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி. | 7.50 | 7.50 | இடம் பார்வையிடப் பட்டது. பணி செய்ய இடையூறுகள் ஏதுமில்லை. |
| 4. | தாரமங்கலம் நகராட்சி 20வது வார்டு புலவன் சந்து தெரு குருத்து பெரியசாமி வீடு முதல் துணை சுகாதார நிலையம் வரை 100 மீட்டர் தார்சாலை அமைக்கும் பணி | 7.50 | 7.50 | இடம் பார்வையிடப் பட்டது. பணிகள் செய்ய இடையூறுகள் ஏதுமில்லை. |
| | மொத்தம் | 27.50 | 27.50 | |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.548/2022/அ1)

பொருள் எண்.286 (25)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2021–2022ஆம் ஆண்டு திட்டத்தில் பணியினை மேற்கொள்ள திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கடித செ.மு.ஆ.எண்.1256/2022/அ2 நாள்.18.11.2022–ன் படி கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி துவங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சம் |
|---|---|---|
| 1. | தாரமங்கலம் நகராட்சி பெத்தான் நஞ்சப்ப முதலி தெருவில் உள்ள நவீன கழிப்பிடம் அருகில் 42 மீட்டர் நீளம், 1.5 மீட்டர் அகலம் சாக்கடை வசதி அமைக்கும் பணி | 3.00 |
| 2. | தாரமங்கலம் நகராட்சி 14 வது வார்டு ஜலகண்டாபுரம் மெயின் ரோடு யமஹா ஷோரூம் முதல் சரஸ்வதிமணி வீடு வரை 150 மீட்டர் நீளம் 4 மீட்டர் அகலம் புதிய கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | 7.50 |
| 3. | தாரமங்கலம் நகராட்சி 20வது வார்டு புலவன் சந்து தெரு குருத்து பெரியசாமி வீடு முதல் துணை சுகாதார நிலையம் வரை 100 மீட்டர் தார்சாலை அமைக்கும் பணி | 7.50 |
| | மொத்தம் | 18.00 |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 548/2022/அ1)

பொருள் எண்.287 (26)

தாரமங்கலம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தில் (Tied Grant) – 2021–2022 ன் கீழ் தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து கடித நக.எண்.31112/2021/சி.எப்.சி/1 நாள்.16.11.2021–ன்படி பின்வரும் மொத்தம் 8 பணிகளுக்கு ரூ.26.50/–லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, இப்பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக கடித ந.க.எண்.826/2022/அ1 நாள்.21.11.2022–ன்படி 07.12.2022ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எ | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ல) |
|---|---|---|
| 1 | Construction of Strom water drain with culvert at Thandu Mariamman kovil theru (UNICODE: 306010R049, Length of Road - 180.00m, Length of Drain - 180.00m,Width of vent-0.30m) in Tharamangalam Municipality. | 6.50 |
| 2 | Construction of Strom water drain at Singandi Lakshmanamudhali theru (UNICODE:306010S133, Length of Road - 70.00m, Length of Drain - 70.00m,Width of vent-0.30m) in Tharamangalam Municipality. | 2.10 |
| 3 | Construction of Strom water drain at Singandi Sitha mudhail theru (UNICODE:306010L013, Length of Road - 90.00m, Length of Drain - 90.00m,Width of vent-0.30m) in Tharamangalam Municipality. | 2.60 |
| 4 | Construction of Strom water drain at Thotikaran kailasa mudhali theru (UNICODE:306010S134, Length of Road - 85.00m, Length of Drain - 85.00m ,Width of vent-0.30m) in Tharamangalam Municipality. | 2.50 |
| 5 | Construction of Strom water drain with culvert at Palaya Pillaiyar Kovil street (UNICODE:306024R101, Length of Road - 340.00m, Length of Drain - 100.00m ,Width of vent-0.30m) in Tharamangalam Municipality. | 4.60 |
| 6 | Construction of Strom water drain at Sankagiri Street 05 (UNICODE:306027S240, Length of Road - 70.00m, Length of Drain - 70.00m ,Width of vent-0.40m) in Tharamangalam Municipality. | 2.45 |
| 7 | Construction of Strom water drain at Sankagiri Street 07 (UNICODE:306027S242, Length of Road - 85.00m, Length of Drain - 85.00m ,Width of vent-0.40m) in Tharamangalam Municipality. | 2.75 |
| 8 | Construction of Strom water drain at Sankagiri Street 08 (UNICODE:306027S243, Length of Road - 90.00m, Length of Drain - 90.00m ,Width of vent-0.40m) in Tharamangalam Municipality. | 3.00 |
| | Total | **26.50** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.826/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை 15வது நிதிக்குழு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.288 (27)**

தாரமங்கலம் நகராட்சியில் 2022–2023ஆம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 20வது வார்டு கிழக்குபாவடி பகுதியில் சர்வே எண்.159/7–ல் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் நுண் உர மையம் –2 எண்ணிக்கை தலா 3 மெட்ரிக் டன் எடை மொத்தம் 6 மெட்ரிக் டன் அளவில் ரூ.69.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் தேர்வு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிகள் ஆரம்பிக்கும் நிலையில் அப்பகுதி வார்டு பொது மக்கள் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.26 கீழ்சின்னாகவுண்டம்பட்டி சர்வே எண்.244/3–ல் நுழைவு வாயிலின் வடக்கு மற்றும் தெற்கு புறத்தில் இப்பணிகள் மேற்கொள்ள இடம் மாறுதல் செய்ததற்கு நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மறு பணி உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 411/2022/அ1)

**பொருள் எண்.289 (28)**

அரசாணை எண்.Ms.103, நிதித்துறை நாள்.11.04.2022–ன் படி, தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள சாலையோர வியாபாரிகள் குறித்து கணக்கெடுத்தல், அடையாள அட்டை வழங்குதல் போன்ற பணிகள் செய்வதற்கு, மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு 15.07.2022 ஆம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sense Images என்ற நிறுவனத்திற்கு 19.07.2022 ஆம் தேதி ஒரு நபருக்கு ரூ.700/– வீதம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் பணி உத்தரவு வழங்கப்பட்ட நிறுவனத்திடம் மேற்காணும் பணிக்கு நகராட்சியின் மூலம் விலை குறைத்து வழங்க கோரியதை தொடர்ந்து, Sense Images என்ற நிறுவனத்தின் மூலம் மேற்காணும் பணிக்கு ஒரு நபருக்கு ரூ.450/– வீதம் குறைத்து பணிகள் மேற்கொள்வதற்கு 28.10.2022 ஆம் தேதி கடிதம் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.993/2020/அ1)

**பொருள் எண்.290 (29)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Bolero வாகனமும், நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Scorpio வாகனமும் கொள்முதல் செய்யப்பட்டது. Bolero வாகனத்திற்கு LifeTax Rs.156460/-க்கு அபராததொகை Rs.12480/- Scorpio வாகனத்திற்கு LifeTax Rs.283387/- க்கு அபராத தொகை Rs.22632/- ஆக இரு வாகனங்களுக்கும் வாகன செலவினம் ரூ.474959/—யை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு இணையதள வங்கி பணபரிவர்த்தனை செய்வதற்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.40/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.291 (30)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Bolero வாகனமும், நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Scorpio வாகனமும் கொள்முதல் செய்யப்பட்டது. மேற்படி ஆணையாளர் வாகனத்திற்கு தொகை ரூ.25844/— நாள்.10.10.2022—ன் படி மற்றும் தலைவர் வாகனத்திற்கு ரூ.51647/— நாள்.10.10.2022—ன் படி 2022—2023ஆம் ஆண்டிற்கு Insurance காப்பீடு தொகை The oriental Insurance நிறுவனத்திற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரைவோலை மூலம் நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 40/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.292 (31)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் ஏ.வி.ஆர். நகைக்கடை நிறுவனம் மூலம் விளம்பர பலகை பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டு 23.9.2022 வரை ஒரு வருடம் முடிவடைந்துள்ளதால், மீண்டும் 2022—2023 ஆம் ஆண்டிற்கு புதுப்பித்தல் (22.09.2023) வரை செய்து கொடுக்க வரப்பெற்ற விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 1219/2022/அ1)

**பொருள் எண்.293 (32)**

தாரமங்கலம் நகராட்சியில் **2022–2023** ஆம் ஆண்டு **(01.11.2022** முதல் **31.03.2023** முடிய) உள்ள காலத்திற்கு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, நகராட்சியின் திட்டப்பணிகள் மற்றும் பொது நிதி பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடுகள் மற்றும் முன்மொழிவுகள் தயார் செய்வதற்கும் பொறியியல் பிரிவில் **2022–2023**ஆம் ஆண்டிற்கு பொதுப்பணித்துறை ஊதிய விகிதத்திற்கு உட்பட்டு தொழில்நுட்ப உதவியாளர் திரு.வசந்த் என்பவருக்கு மாதாந்திர ஊதியம் **11/2022** முதல் நகராட்சியின் பொதுநிதியில் வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். **1220/2022/**அ**1)**
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.294 (33)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான குளத்தினை சுற்றி பாதுகாப்பிற்காக இரும்பு கம்பி வேலி அமைப்பதற்கு நகராட்சியின் செலவினத்தினை தவிர்க்கும் பொருட்டு புதிய இரும்பு பைப்புகள் வாங்குவதற்கு பதிலாக ஏற்கனவே இருப்பில் உள்ள பழைய **21** எண்ணம் இரும்பு பைப்புகளை **(10** அடி பைப்) கொண்டு புதியதாக கம்பி வேலி அமைக்கவும் மற்றும் பைப்புகளை நிறுத்துவதற்கு கலவை அமைக்கவும் உத்தேசமாக ரூ.**50000/–** நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.**1221/2022/**அ**1)**
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.295(34)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழைநீர் தேங்கி நிற்கும் போது அதனை உறிஞ்சு எடுப்பதற்கு நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று புதியதாக **1** ஹட்சி.பி. மின்மோட்டார் வாங்கியதற்கு ஸ்ரீ ஆறுபடை ஏஜென்சீஸ் சேலம் என்ற நிறுவனத்திற்கு தொகை ரூ.**36000/–** நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.**1222/2022/**அ**1)**
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .296 (35)

தாரமங்கலம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் திட்டப்பணிகள் மற்றும் இதர பணிகள் இணையதளத்தில் பதிவு செய்யவும், ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் புதிய லேப்டாப் தேவைப்படுவதால், ஜெம் போர்ட்டல் அரசால் அறிவிக்கப்பட்ட விலையில் புதியதாக ரூ.75000/– மதிப்பீட்டில் வாங்குவதற்கும் நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 1190/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .297 (36)

தாரமங்கலம் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் (2022–2023) ஆம் ஆண்டு புதிய நுண் உயிர் செயலாக்க மையத்தில் (Bio-mining) முறையில் வரலாற்று குப்பைகளை அகற்றும் பணிகள் மேற்கொள்வதற்கு 110 கிலோ வாட் டிரான்ஸ்பார் மின்சார வாரியத்திலிருந்து அமைக்க தேவைப்படும், பேணல் போர்டு, சுவிச் பாக்ஸ் மற்றும் மின் இணைப்பு கேபிள் உட்பட்ட அனைத்து பணிகளும் செய்திட தொகை ரூ.115000/– நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.950 /2021/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண் .298 (37)

தாரமங்கலம் நகராட்சியில் உள்ள 15 பொது மற்றும் சமுதாயக்கழிப்பிடங்களிலும் QR CODE, பொருத்துவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.27000/– நகராட்சியின் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் . 299 (38)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பின்புறமுள்ள பெண்கள் கழிப்பிடத்தின் பழுதடைந்த 6 எண்ணிக்கை கதவுகளுக்கு பதிலாக புதியதாக கதவுகள் பொருத்தியமைக்கு ஸ்ரீசிவசக்தி டிம்பர் மார்ட் ஹார்டுவேர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.17700/– யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் .300 (39)**

தாரமங்கலம் நகராட்சியின் ஆடுஅடிக்கும் தொட்டி பழுதடைந்துள்ளதை A4 Size 6 எண்ணிக்கை அளவில் புகைப்படம் எடுத்தது, தமிழக அரசின் 100 ஏரிகள் நிரப்பும் திட்டத்தின் கீழ் தாரமங்கலம் ஏரியில் காவிரி உபரிநீர் நிரம்பி வழிவதையும் மழைநீர் வடிகால் ஜேசிபி கொண்டு எடுப்பதையும் A4 Size 34 எண்ணிக்கை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துக் கொடுத்தமைக்கும் திரு.பி.செல்வராஜ் சன் ஸ்டுடியோ என்ற நிறுவனத்திற்கு ரூ.13700/– யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.970/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .301 (40)**

தாரமங்கலம் நகராட்சியின் தமிழக அரசின் 100 ஏரிகள் நிரப்பும் திட்டத்தின் கீழ் தாரமங்கலம் ஏரியில் காவிரி உபரிநீர் நிரம்பி வழிவதால் பேருந்து நிலையம் பின்புறம், சங்ககிரி மெயின் ரோடு அரசினர் மாணவர் விடுதி ஆகிய இடங்களில் பொதுமக்கள் நலன்கருதி தடுப்பு எற்படுத்தும் வகையில் முட்டுமரம் கொண்டு பேரிகாட் கட்டிக்கொடுக்கும் பணி செய்தமைக்கு திரு.எம்.சிவப்பிரகாசம் பந்தல் அமைப்பாளர் என்பவருக்கு ரூ.17000/–யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 970/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .302 (41)**

தாரமங்கலம் நகராட்சி நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு, 3 வது வார்டு, 5 வது வார்டு, 15 வது வார்டு, 7 வது வார்டு, மற்றும் 27 வது வார்டு ஆகிய பகுதிகளில் புல் பூண்டு அகற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால் அடைப்பு நீக்குதல் ஆகிய பணிகள் JCB கொண்டு பணிசெய்து கொடுத்த மைக்கு கலை கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு ரூ.103500/—யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன்அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .303 (42)**

தாரமங்கலம் நகராட்சி சங்ககிரி மெயின் ரோடு ஆகிய சாலைகளில் பூக்கடைகள், பழக்கடைகள், காய்கறிகள் கடை மெயின் ரோட்டில் போக்கு வரத்திற்கு இடையூறில்லாமல் வியாபாரி களுக்கும் பொதுமக்களுக்கும் நலன்கருதி தடுப்பு ஏற்படுத்தும் வகையில் முட்டுமரம், நைலான் கயிறு, பச்சைநிற வலை, எனாமல், பிரஷ் ஆகியவை கொண்டு பேரிகாட் கட்டிக்கொடுக்கும் பணி செய்திட பொருட்கள் வாங்கியமைக்கு ஸ்ரீ லட்சுமி டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு ரூ.6057/—யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 270 /2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .304 (43)**

தாரமங்கலம் நகராட்சியின் தினசரி மார்க்கெட் பகுதியில் சாலையோர கடைகள் மெயின் ரோட்டில் போக்குவரத்துக்கு இடையூறின்றி வைக்க பேரிகாட் அமைத்தல், வார்டு எண்.10ல் இருந்து குடிநீர் மேல்நிலைத் தொட்டியை இடமாற்றம் செய்தமைக்கு வெல்டிங் வேலை செய்து கொடுத்தமைக்கு ரூ.12,870/—யை அனு இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கே.ஆர்.தோப்பூர் என்பவருக்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 251/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .305 (44)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பாரக்கல்லூர் சாமியப்பன் வீடு அருகில் கைப்பம்பு–1, பெரியான் வளவு அருகில் கைப்பம்பு –1, ஆகிய இடங்களில் உள்ள கைப்பம்பு பழுதடைந்ததை பழுதுநீக்கம் செய்து கொடுத்தமைக்கு திரு.கே.கந்தசாமி என்பவருக்கு ரூ.5680/–யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.62/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .306 (45)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளில் மேற்கொள்ளும் திட்டப்பணிகள் 1.கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், தூய்மை இந்தியா திட்டம், 15 வது நிதிக்குழு மான்யம் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து, கல் பப்ளிகேஷன்ஸ் பிரைவெட் லிமிடெட் நாளிதழில் தாரமங்கலம் நகராட்சி சார்பாக விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக்கட்டண செலவினம் ரூ.7875/– யை கல் பப்ளிகேஷன்ஸ் பிரைவெட் லிமிடெட் நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 1091/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண் .307 (46)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி தினசரி குப்பைகளை தரம் பிரிப்பதற்கான தேசிய அளவிலான விழிப்புணர்வு முகாம் (Swauchhata ke Do rang) என்ற தலைப்பில் பள்ளி மாணவ மாணவியருக்கு விழிப்புணர்வு வழங்கி போட்டியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கிடவும், பரிசுப்பொருள் வழங்கிடவும், விழிப்புணர்வு ஏற்படுத்திட ஸ்டிக்கர், பேனர்கள், மல்டி கலர் நோட்டீஸ் அச்சடித்தது ஆகிய பணிகளுக்கான கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படியான தொகைகள்

| | | |
|---|---|---|
| 1.சான்றிதழ் தயார் செய்து கொடுத்தது | ராசி ஆப்செட் | ரூ.3000/–ம், |
| 2.எனது குப்பை எனது பொறுப்பு ஸ்டிக்கர், பேனர், பிரிண்ட்எடுத்தது | தீபம் ஆர்ட்ஸ் | ரூ.6500/–ம், |
| 3.ஸ்டெயின் லெஸ் ஸ்டீல் பவுல் பரிசுப் பொருட்கள் | சரவணாஸ்டோர் | ரூ.4000/–ம், |
| 4.தூய்மையின் இரு வண்ணங்கள் 15X3, 8X5 பேனர்கள் அச்சடித்தது | ராசி ஆப்செட் | ரூ.1450/–ம், |
| 5.மல்டி கலர் நோட்டீஸ் 350 எண்ணிக்கை அச்சடித்தது | ராசி ஆப்செட் | ரூ.5250/–ம், |
| | | ரூ.20200/– |

ஆக ரூ.20200/—யை இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று திரு.சி.கோபிநாத் துப்புரவு ஆய்வாளருக்கு தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 970/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .308 (47)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி 2022—2023ஆம் ஆண்டு 1 முதல் 27 வார்டுகளில் மேற்கொள்ளும் திட்டப்பணிகள் 1.கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், தூய்மை இந்தியா திட்டம், 15 வது நிதிக்குழு மான்யம் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து, தினத்தந்தி நாளிதழில் தாரமங்கலம் நகராட்சி சார்பாக விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக்கட்டண செலவினம் ரூ.7466/— யை தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1191/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .309 (48)

தாரமங்கலம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கோப்புகள் பைண்டிங், பிறப்பு இறப்பு பைண்டிங், அறிவிப்பு நோட்டீஸ் அச்சடித்தது, வில்லங்க சான்று பிரிண்ட் எடுத்தது மற்றும் A4 Size, Legal Size பேப்பர் வாங்கியமைக்கு செலவினம் ரூ.17482/— யை திரு.வி.தனராஜ் ராசிபிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1192/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .310(49)

தாரமங்கலம் நகராட்சி 2022–2023ஆம் ஆண்டு 1 முதல் 27 வார்டுகளில் மேற்கொள்ளும் திட்டப்பணிகள் 1.கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம், தூய்மை இந்தியா திட்டம், 15 வது நிதிக்குழு மான்யம் ஆகிய திட்டங்களின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகள் குறித்து, கல் பப்ளிகேஷன்ஸ்–ல் தாரமங்கலம் நகராட்சி சார்பாக விளம்பரம் செய்தமைக்கு விளம்பரக்கட்டண செலவினம் ரூ.9900/–யை மலர் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திற்கு இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.826/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .311 (50)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி தாரமங்கலம் நகராட்சி வார்டுகள் வரையறை செய்து வார்டு சபா உறுப்பினர்கள் தேர்வு செய்து கலந்துரையாடல் நகர் மன்றகூட்டம் 28.10.2022ஆம் தேதியில் நடத்தப்பட்டது கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்பு, காரமிக்ஸர், தேநீர் வழங்கியது மழைநீரால் இடையூறு தவிர்க்கும் பொருட்டு தடுப்பு ஏற்படுத்துவதற்கு சாரம் கயிறு வாங்கியது தெருவிளக்கு மின்கம்பங்களில் சுவிட்ச் பாக்ஸ் மாற்றியமைக்கு எலக்ட்ரிக் ஒயரிங் உதிரி சாமான்கள் வாங்கியது.

| | | |
|---|---|---|
| 1. இனிப்பு, காரமிக்ஸர், தேநீர், தண்ணீர் பாட்டில் வாங்கியது | ராகவேந்திரா | ரூ.2160/–ம், |
| 2. இனிப்பு, காரமிக்ஸர், தேநீர் வாங்கியது தண்ணீர் பாட்டில் | ராகவேந்திரா | ரூ.3640/–ம், |
| 3.வெட்னி கரடு தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ் | ஸ்ரீவிநாயகா ஹார்டுவேர்ஸ், | ரூ.2750/–ம், |
| 4. வெட்னி கரடு தெருவிளக்கு சுவிட்ச் பாக்ஸ் | ஸ்ரீவிநாயகா ஹார்டுவேர்ஸ், | ரூ.2250/–ம், |
| 5.சாரம் கட்டுவதற்கு கயிறு கட்டுக்கம்பி வாங்கியது | ஸ்ரீவிநாயகா ஹார்டுவேர்ஸ், | ரூ.500/–ம், |
| 6.சேவான்வளவு மாரியம்மன் கோவில் முன்பு பேனல் போர்டு குண்டு பழுதுநீக்கம் | ராயல் எலக்ட்ரிக்கல் ஹார்டுவேர்ஸ், | ரூ.1189/–ம், |
| 7.பள்ளக்காடு பேனல் போர்டு குண்டு பழுதுநீக்கம் | ராயல் எலக்ட்ரிக்கல் ஹார்டுவேர்ஸ், | ரூ.2181/–ம், |
| | **ஆக மொத்தம்** | **14670** |

ஆகமொத்தம் ரூ.14670/–யை திரு.சி.ராமன் இளநிலை உதவியாளர் என்பவருக்கு இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண். 1193/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .312 (51)

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிட கழிவுநீர்த்தொட்டியில் நிரம்பிவிட்ட கழிவுநீரை அகற்றிக் கொடுக்கும் பணி செய்து கொடுத்தமைக்கு நியூ ஏ1 செப்டிக் கிளினிங் என்ற நிறுவனத்திற்கு ரூ.12000/—யை நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.04 /2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .313 (52)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி பேருந்து நிலைய கடை எண்.1,2,3,4,5ஆகிய கடைகளின் 2016—17 முதல் 2019—2020 வாடகை நிலுவை தொகை செலுத்துதல் தொடர்பாக வழக்கு எண்.O.S.162/2019 வழக்கு நடத்திக் கொடுக்க வழக்கறிஞர் கட்டணம் பட்டியல் தொகை ரூ.10000/—யை திரு.எம்.கண்ணன் M.Sc.,B.L அரசு வழக்கறிஞர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஓமலூர் என்பவருக்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1194/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

பொருள் எண் .314 (53)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சியின் துப்புரவு ஆய்வாளருக்கு பிறப்பு இறப்பு பதிவேடுகள் பாதுகாப்பாக வைப்பதற்கு புதியதாக இரண்டு பீரோக்கள் ரூ.27000/— நகராட்சியின் பொது நிதியில் தொகை வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.1193/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் .315 (54)**

அரசாணை (நிலை) எண்.117 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.07.12.2021–ன்படி தாரமங்கலம் பேரூராட்சி தாரமங்கலம் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது ஆனால் நாளது வரை நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடங்கள் மேல்நிலை தொட்டி, உரப்பூங்கா மற்றும் வண்டி வாகனங்கள் அனைத்திலும் தாரமங்கலம் நகராட்சி என பெயர் மாற்றம் செய்யப்படாமல் உள்ளது. எனவே மேற்காணும் அனைத்து இனங்களிலும் பெயிண்ட் மூலம் தாரமங்கலம் நகராட்சி என பெயர் மாற்றம் செய்யவும் அதற்கான செலவினத்தினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.598/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண் .316 (55)**

தாரமங்கலம் நகராட்சியில் கீழ்க்கண்ட வார்டுகளில் குடிநீர் வழங்கும் பொருட்டு

1. 2வது வார்டு பொத்தியாம்பட்டி காட்டுவளவு 1000 லிட்டர்
2. 5வது வார்டு வெட்னிகரடு செல்லதுரை வீடு பகுதியில் 2000 லிட்டர்
3. 6வது வார்டு ஆசிரியர் காலனி (அரவிந்த் வீடு முன்)
4. 15வது வார்டு முனியகவுண்டன்வளவு (செல்வம் வீடு அருகில்)
5. 16வது வார்டு பெரியாம்பட்டி காட்டுவளவு 1000 லிட்டர்

ஆகிய இடங்களில் சின்டெக்ஸ் டேங்க் குட்டு மற்றும் பிளாட்பாரம் அமைத்தமைக்கும் மற்றும் 24வது வார்டு சமுதாய கூடம் மரப்பலகை மூலம் ரேம்ப் கட்டியமைக்கு நகராட்சியின் பொது நிதியில் திரு.எம்.பழனிசாமி என்பவருக்கு ரூ.49000/– நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.60/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.317 (56)**

தாரமங்கலம் நகராட்சி 2022–2023ஆம் ஆண்டு பொதுநிதியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு, இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.411/2022/அ1 நாள்.19.10.2022ஆம் தேதி கோரியதில், அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு நகராட்சியின் பொதுநிதியில் பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ | பணியின் விபரம் | மதிப்பீடு (இ) |
|---|---|---|
| 1 | 1வது வார்டு ரெட்டியூர் பகுதியில் குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 58000 |
| 2 | 1வது வார்டு ராஜீவ் காந்தி நகர் பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணி | 63000 |
| 3 | 1வது வார்டு அருந்ததியர் காலனி பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 37000 |
| 4 | 2வது வார்டு பொத்தியாம்பட்டி காலனி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள அடிகுழாயினை மாற்றிவிட்டு புதிய மினி பவர் பம்ப் அமைத்தல். | 185000 |
| 5 | 3வது வார்டு பனங்காடு அடிகுழாய் மாற்றிவிட்டு மினிபவர் பம்ப் , சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 280000 |
| 6 | 5வது வார்டு ஜலகண்டாபுரம் மெயின் ரோடு குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 300000 |
| 7 | 8வது வார்டு கைலாஷ் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. | 285000 |
| 8 | 9வது வார்டு அருணாசலம்புதூர் பகுதியில் குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 90000 |
| 9 | 20வது வார்டு பாவடி பெரியண்ண முதலி தெருவில் சிமெண்ட் சாலையை புனரமைப்பு | 190000 |
| 10 | 22வது வார்டு அம்பேத்கர் நகர் மாரியம்மன் கோவில் அருகில் அடிகுழாய் மாற்றிவிட்டு மினிபவர் பம்ப் மற்றும் பைப் லைன் விஸ்தரிப்பு பணி. | 250000 |
| | **மொத்தம்** | **1738000** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.411/2022/அ1)
2. மேற்காணும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.262 (1) , 264(3) , 266 (5) முதல் 317 (56) வரை, நாள்.30.11.2022.**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மானம் எண். 263 (2) நாள்.30.11.2022.**

பூங்காவின் பராமரிப்பிற்காக 2 பணியாளர்கள் நியமித்து பூங்காவிற்குள் செல்வதற்கு ரூ.5/– என நிர்ணயம் செய்வதற்கு பதிலாக ஒப்பந்த அடிப்படையில் தனியாரிடம் பூங்காவினை ஒப்படைத்து பராமரிப்பினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 265 (4 ) நாள்.30.11.2022.**

1. 28.06.2022 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பேட்டரி வாகனம் மற்றும் தள்ளுவண்டிகள் பழுது நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**

பொருள் எண் .266 (5)

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட உள்ள திறந்தவெளி கிணறுகளில் முதல் கட்டமாக கீழ்க்கண்ட வார்டுகளில் உள்ள திறந்தவெளி கிணறுகளில் , குழந்தைகள் மற்றும் பொது மக்கள் , விலங்கினங்கள் தவறி விழாமல் இருப்பதற்கு, பாதுகாப்பு நலன் கருதி அவற்றிற்கு முறையாக உரிய இரும்பு கம்பி வேலி அமைத்து கிணற்றின் மேல் பகுதியினை ஆங்கிள் கொண்டு , வெல்டிங் செய்து மூடி வைக்கவும் அதற்கு ஆகும் செலவினம் ரூ.9,00,000/– தாரமங்கலம் பேரூராட்சியாக இருந்த காலத்தில் பெறப்பட்ட 2020–2021 –ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வார்டு எண் | பகுதியின் பெயர் |
|---|---|---|
| 1. | 1 | கசுவரெட்டிப்பட்டி |
| 2. | 2 | ஆதிதிராவிடர் தெரு |
| 3. | 4 | பெரியாம்பட்டி மாரியம்மன் கோவில் |
| 4. | 5 | வெட்னிகரடு |
| 5. | 6 | காரைக்காட்டு மாரியம்மன் கோவில் |
| 6. | 10 | உப்புகிணறு |
| 7. | 13 | மேற்கு ரதவீதி |
| 8. | 14 | ஜலகண்டாபுரம் ரோடு (வேலாயுதசாமி கோவில்முன்புறம்) |
| 9. | 15 | முனியகவுண்டன்வளவு |
| 10. | 16 | மோட்டுப்பட்டி |
| 11. | 18 | புதுத்தெரு லைன் முத்து முனியப்பன் கோவில் தெரு |
| 12. | 20 | புலவன் சந்து |
| 13. | 21 | பாவடி ஆறுமுக முதலி தெரு |
| 14. | 22 | ஆதிதிராவிடர் தெரு |
| 15. | 27 | கட்டைய முத்து முதலி தெரு |